The Hindu (Tamil)
Dated: 28.08.2024

# நடிகர் விஜய் கட்சி கொடியில் இருந்து யானை சின்னத்தை அகற்ற கோரி புகார்

## தலைமை தேர்தல் அதிகாரியிடம் பகுஜன் சமாஜ் கட்சி மனு

● சென்னை

நடிகர் விஜய் தனது கட்சியின் கொடியில் இடம்பெற்றுள்ள யானை சின்னத்தை அகற்ற கோரி தமிழக தலைமை தேர்தல் அதிகாரியிடம் பகுஜன் சமாஜ் கட்சி மனு அளித்துள்ளது.

நடிகர் விஜய் தனது தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் கொடியை சமீபத்தில் வெளியிட்டார். மஞ்சள், கருஞ்சிவப்பு நிறங்கள் அடங்கிய அந்த கொடியில், இரண்டு யானைகள் மற்றும் நடுவில் வாகை பூ இடம் பெற்றிருந்தன. இந்நிலையில், தங்கள் கட்சியின் சின்னமான யானையை விஜய் பயன்படுத்தியதற்கு, பகுஜன் சமாஜ் கட்சியினர் எதிர்ப்பு தெரிவித்திருந்தனர்.

இதன்தொடர்ச்சியாக நேற்று தலைமை தேர்தல் அதிகாரி சத்ய பிரத சாஹூவிடம் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில அலுவலக செயலாளர் டி.தமிழ்மதி இதுகுறித்து புகார் மனு அளித்தார். அதன்பிறகு செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

நடிகர் விஜய் அறிமுகம் செய்த கொடியில், பகுஜன் சமாஜ் கட்சியின் தேசிய அங்கீகாரம் பெற்ற யானை சின்னத்தை பொறித்துள்ளார். இதுகுறித்து, தலைமை தேர்தல் அதிகாரியிடம் புகார் மனு அளித்துள்ளோம். இந்திய குடியரசு கட்சியின் சின்னமாக இருந்தநிலையில் அக்கட்சி அங்கீகாரம் இழந்த நிலையில், அதை பகுஜன் சமாஜ் கட்சியின் சின்னமாக கன்ஷிராம் பெற்றார்.

ஒரு அரசியல் கட்சியின் பிரதான சின்னமாக உள்ள யானையை, மற்றொரு கட்சி எந்த வடிவிலும் பயன்படுத்தக் கூடாது. ஆனால், விஜய் உள்நோக்கத்துடன் பயன்படுத்தியுள்ளார். இதை நீக்கவில்லை என்றால் மிகப்பெரிய சட்டப் போராட்டத்தை பகுஜன் சமாஜ் கட்சி மேற்கொள்ளும். இது தொடர்பாக தேர்தல் ஆணையம் கருத்து கேட்கும்போது நாங்கள் தெரிவிப்போம் என தலைமை தேர்தல் அதிகாரி கூறியுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தேர்தல் சின்னம் ஒதுக்கீட்டை பொறுத்தவரை, தேசிய கட்சிக்கு ஒதுக்கப்படும் சின்னம் அந்த கட்சிக்கு மட்டுமே, வேறு யாருக்கும் ஒதுக்கப்படாது. மாநில கட்சியாக இருக்கும்பட்சத்தில் அந்த மாநிலத்திலும், அந்த கட்சி போட்டியிடும் மாநிலத்திலும் தனிச்சின்னம் ஒதுக்கப்படும்.

இந்நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக, தேர்தல் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, “தேர்தல் ஆணைய விதியில், ஒரு கட்சியின் சின்னத்தை மற்ற கட்சி பயன்படுத்தக் கூடாது என கூறப்பட்டுள்ளது. ஆனால், ஒரு கட்சியின் சின்னத்தை மற்றொரு கட்சி தனது கொடியில் பயன்படுத்துவதை கட்டுப்படுத்தும் நேரடியான விதிகள் இல்லை. எனவே, இந்த விவகாரம் நீதிமன்றத்தில் முறையிடும் பட்சத்தில் புதிய விதிகள் உருவாக்கப்படலாம்” என்றனர்.

Daily Thanthi

Dated: 28.08.2024

# நடிகர் விஜய், கட்சி கொடியில் யானை சின்னத்தை பயன்படுத்தக்கூடாது

## தேர்தல் கமிஷனில் பகுஜன் சமாஜ் கட்சி புகார்

சென்னை, ஆக.28-

நடிகர் விஜய் தனது கட்சிக் கொடியில், யானை சின்னத்தை பயன்படுத்தக் கூடாது என்று தேர்தல் கமிஷனில் பகுஜன் சமாஜ் கட்சி புகார் அளித்துள்ளது.

### யானை சின்னம்

சென்னை தலைமைச்செயலகத்தில் தலைமைத்தேர்தல் அதிகாரியிடம் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில அலுவலகச் செயலாளர் தமிழ்மதி அளித்த மனுவில் கூறப்பட்டு இருப்பதாவது:-

அங்கீகாரம் பெற்ற எங்கள் கட்சியின் தேர்தல் சின்னமான யானை சின்னத்தை, இந்தியா முழுவதும் கொடியிலும் பயன்படுத்தி வருகிறோம். நீலக் கொடியும், யானைச் சின்னமும் பகுஜன் சமாஜ் கட்சியின் தேசிய அடையாளமாக உள்ளன.

தற்போது தமிழகத்தில் புதிதாக கட்சி தொடங்கியிருக்கும் நடிகர் விஜய், தனது கட்சியின் கொடியில் யானை உருவத்தை இடம்பெறச் செய்துள்ளார். அது, எங்கள் கட்சியின் தேசிய அங்கீகாரம் பெற்ற யானை உருவமாகும்.

இதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்தோம். ஆனால் எந்த பதிலையும் நடிகர் விஜய் தரவில்லை. நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஒரு தேசிய கட்சியின் சின்னத்தை சட்ட விரோதமாக தனது புதிய கட்சிக் கொடியில் பயன்படுத்தி இருக்கும் நடிகர் விஜய் மீது தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அவரது கட்சி கொடியில் உள்ள யானை உருவத்தை அகற்றி, மக்களிடையே குழப்பம் ஏற்படாமல் இருக்க வழிவகை செய்ய வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### சட்டப் போராட்டம்

இதுகுறித்து பத்திரிகையாளர்களுக்கு அக்கட்சியின் மாநில செயலாளர் சத்யமூர்த்தி அளித்த பேட்டி வருமாறு:-

ஒடுக்கப்பட்ட மக்கள் மிகப் பெரிய சமுதாயமாக உள்ளனர் என்பதை குறிப்பிடுவதற்காகத்தான் மிகப்பெரிய உருவமான யானையை தனது சின்னமாக பகுஜன் சமாஜ் கட்சி தேர்வு செய்துள்ளது. சில வியாபார நிறுவனங்கள், யானை உருவத்தை பயன்படுத்துவதற்கு எங்களுக்கு ஆட்சேபனை கிடையாது.

ஆனால் ஒரு அரசியல் கட்சியின் சின்னத்தை மற்றொரு அரசியல் கட்சி எந்தவொரு வடிவிலும் பயன்படுத்தக் கூடாது. ஆனால் நடிகர் விஜய் அதை உள்நோக்கத்தோடு வேண்டுமென்றே செய்தது போல் தோன்றுகிறது. எனவே அவர்களின் கொடியில் இருந்து யானை உருவத்தை நீக்கவில்லை என்றால் சட்ட ரீதியான போராட்டத்தை பகுஜன் சமாஜ் முன்னெடுக்கும்.

### மக்களை குழப்பும்

பகுஜன் சமாஜ் கட்சியின் தேர்தல் சின்னத்தை, நடிகர் விஜய் தனது கட்சியின் சின்னமாக வைக்கவில்லை என்றும் அதன் கொடியில் மட்டும் தான் பயன்படுத்துகிறார் என்று கூறுவதில் நியாயம் இல்லை. ஒரு அரசியல் கட்சியின் சின்னத்தை மற்றொரு அரசியல் கட்சி எந்த உருவத்திலும் பயன்படுத்தக் கூடாது. அப்படி பயன்படுத்துவது மக்களை குழப்பத்தில் ஆழ்த்தும்.

இந்த விஷயத்தில் இந்திய தேர்தல் கமிஷன் முடிவெடுக்கும் என்று தலைமைத் தேர்தல் அதிகாரி கூறினார். இதில் நடிகர் விஜய் தரப்பில் இருந்து எந்த பதிலும் அளிக்கவில்லை என்பதால் சட்ட ரீதியான நடவடிக்கைக்கு செல்ல இருக்கிறோம்.

இவ்வாறு அவர் கூறினார்.

---

### விரைவில் புதிய முடிவு வரவாய்ப்பு?

**-தேர்தல் கமிஷன்**

பகுஜன் சமாஜ் கட்சியின் சின்னமான யானையின் உருவத்தை, நடிகர் விஜயின் தமிழக வெற்றிக் கழகம் கட்சி தனது கொடியில் பயன்படுத்துவது பற்றி தேர்தல் கமிஷன் அதிகாரிகளிடம் கேட்ட போது அவர்கள் கூறியதாவது:-

தேர்தல் கமிஷனிடம், ஒரு கட்சியின் சின்னத்தை மற்ற கட்சி பயன்படுத்தக் கூடாது என்ற மைய விதி உள்ளது. ஆனால் ஒரு கட்சியின் சின்னத்தை மற்றொரு கட்சி தனது கொடியில் பயன்படுத்துவதை தடுக்கும் விதத்தில் நேரடியாக விதிகள் எதுவும் இல்லை. எனவே இதில் இந்திய தேர்தல் கமிஷன் புதிய முடிவை எடுக்க வேண்டியதிருக்கும். அதற்கான முடிவு விரைவில் எடுக்கப்படும். மேலும், இந்த பிரச்சினை சட்ட ரீதியாக கோர்ட்டிற்கும் செல்ல வாய்ப்புள்ளது. அதன் பிறகு புதிய விதி உருவாக்கப்படலாம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

Dinamalar

Dated: 28.08.2024

# கொடியில் யானை சின்னம் விஜய் மீது பகுஜன் புகார்

**சென்னை, ஆக. 28–**

பகுஜன் சமாஜ் கட்சி மாநில அலுவலக செயலர் தமிழ்மதி, தமிழகத் தலைமை தேர்தல் அதிகாரியிடம் அளித்துள்ள மனு:

எங்கள் கட்சிக் கொடியிலும், தேர்தல் சின்னமாகவும், யானையை பயன்படுத்தி வருகிறோம். நீலக்கொடியும், யானை சின்னமும் பகுஜன் சமாஜ் கட்சியின் தேசிய அடையாளம்.

அம்பேத்கர் தேர்வு செய்து, தேர்தலில் போட்டியிட்ட சின்னம். யானை சின்னத்துக்கும், பகுஜன் சமாஜ் கட்சிக்கும் உணர்வுப்பூர்வமான வரலாற்று உறவு உள்ளது.

தமிழகத்தில் புதிதாக கட்சி துவக்கி உள்ள நடிகர் விஜய் தன் கொடியை அறிமுகம் செய்துள்ளார். அதில், எங்கள் கட்சியின் சின்னமான யானை உருவம் இடம் பெற்றுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், எந்த பதிலும், நடவடிக்கையும் எடுக்காமல் விஜய் உள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட தேசிய கட்சி சின்னத்தை பயன்படுத்தியுள்ள விஜய் மீது நடவடிக்கை எடுத்து, அவர் கொடியில் யானை உருவத்தை அகற்ற வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

'விஜய் தன் கட்சி கொடியில் உள்ள யானை உருவத்தை அகற்றாவிட்டால், சட்டரீதியாக நடவடிக்கை எடுப்போம்' என, பகுஜன் சமாஜ் கட்சி மாநில செயலர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## இன்னொரு சிக்கல்

இதற்கிடையில், 'விஜய் கட்சியின் கொடி, திருப்பூரைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கும் பதிவு செய்யப்பட்ட எங்கள் இயக்கமான வெள்ளாளர் முன்னேற்றக் கழகத்தின் கொடி போலவே இருக்கிறது.

அதனால், விஜய் தன் கட்சிக் கொடியை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லையேல், வழக்குத் தொடர்ந்து உரிமையை நிலை நிறுத்துவேன்' என, அக்கழகத்தின் மாநிலத் தலைவர் அண்ணா சரவணன் அறிவித்திருக்கிறார்.

Get a report of DEO asap.
A.K
28/8/24

Dinamalar
Dated: 28.08.2024

# போலி வாக்காளர் அட்டை ரூ.250க்கு தயாரித்தவர் கைது

**பெரம்பலூர், ஆக. 28–**

பெரம்பலூர் மாவட்டம், லப்பைக்குடிகாடு அபுபக்கர் தெருவைச் சேர்ந்தவர் முகமது சமீம், 33, இவர், லப்பைக்குடிகாடு மெயின் ரோட்டில், கம்ப்யூட்டர் சென்டர் நடத்தி வந்தார்.


முகமது சமீம்

அதே கிராமத்தைச் சேர்ந்த முகமது சாஜித், 19, என்பவர், வாக்காளர் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்க இவரை அணுகினார். 250 ரூபாய் பெற்று, வாக்காளர் அடையாள அட்டையை வழங்கினார்.

அந்த அட்டையை ஆதாரமாக வைத்து, முகமது சாஜித் பாஸ்போர்ட் பெற விண்ணப்பித்தார். போலீஸ் விசாரணையில், அவரது வாக்காளர் அடையாள அட்டை போலியானது என தெரிந்தது.

இதையடுத்து, போலீசார் விசாரணை மேற்கொண்டனர். முகமது சாஜித்துக்கு வழங்கியது போல பலருக்கு போலி வாக்காளர் அடையாள அட்டையை முகமது சமீம் வழங்கியது தெரிந்தது.

இதையடுத்து, அவரை கைது செய்து சிறையில் அடைத்தனர்.